பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

21 08 2026 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் எதிர்காலத்தை சிறந்த உள்கட்டமைப்புடன் உருவாக்கும் நோக்கில் அரசின் உயர் அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. ரயில் பயணிகள் அளிக்கும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுவதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

3. அஇஅதிமுக-வின் 21 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான தகுதிநீக்க நடவடிக்கையை பேரவைத்தலைவர் கைவிட்டதில் எந்தத் தவறும் இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

4. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று இடி மின்னலுடன் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்திய வீரர்கள், சீன வீரர்களை எதிர்கொள்கின்றனர்.

<<<<>>>>

நாட்டின் எதிர்காலத்தை சிறந்த உள்கட்டமைப்புடன் உருவாக்கும் நோக்கில் அரசின் உயர் அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

மத்திய அரசின் பல்வேறு துறை செயலாளர்களுடன் புதுதில்லியில் நேற்று அவர் ஆலோசனை நடத்தியபோது இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் இல்லத்தில் நடைபெற்ற இந்த உயர்மட்டக் கூட்டத்தில் உள்கட்டமைப்பு, இணைய பாதுகாப்பு, வெளியுறவு மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைகளின் எதிர்கால செயல்திட்டம் குறித்து விவாதிக்கப்பட்து.

தரவு என்பது தேசிய சொத்து என்று குறிப்பிட்ட பிரதமர், அது எதிர்காலத்திற்கான வளம் என்று கூறினார்.

அதன் பயன்பாட்டை உறுதி செய்யுமாறும் அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

அரசுத்துறைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இளைஞர்களிடையே ஈடுபாட்டை அதிகரித்து கொள்கைகளை வகுப்பதில் புதிய கண்ணோட்டத்தை ஏற்படுத்துமாறும் அவர் வலியுறுத்தினார்.

மனிதர்களின் தலையீட்டையும், நிபுணத்துவத்தையும் உறுதிப்படுத்திக்கொண்டு செயற்கை நுண்ணறிவின் திறன்களையும் புதுமையான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கூறினார்.

ரயில் பயணிகள் அளிக்கும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுவதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரயில்களில் வழங்கப்படும் உணவின் தரம் குறித்து சமீபத்தில் வாரணாசி - புதுதில்லி வந்தேபாரத் விரைவு ரயிலில் பயணம் செய்த பயணி ஒருவர் ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவுக்கு சமூக வலைதளம் வாயிலாக புகார் அனுப்பியிருந்தார்.

அந்தப் புகாரின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், உணவு விநியோகம் செய்த சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உரிமையாளருக்கு இந்திய ரயில்வே மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழக நிறுவனம் 2 லட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளதாகவும் ரயில்வே அமைச்சகம் கூறியுள்ளது.

மேலும் சமையலறையில் கவனக் குறைவாக செயல்பட்டதற்காக ஒப்பந்ததாரர் மீது 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் ரயில்வே அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அஇஅதிமுக-வின் 21 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான தகுதிநீக்க நடவடிக்கையை பேரவைத்தலைவர் கைவிட்டதில் எந்தத் தவறும் இல்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

நேற்று இது தொடர்பான வழக்கில் தீர்ப்பளித்த தலைமை நீதிபதி தர்மாதிகாரி தலைமையிலான அமர்வு, அஇஅதிமுக கொறடா உத்தரவை மீறி வாக்களித்த சட்டமன்ற உறுப்பினர்கள் மன்னிப்பு கோரியதை திரு. எடப்பாடி பழனிசாமி ஏற்றுக்கொண்டுள்ளதால் பேரவைத்தலைவரும் தகுதிநீக்க நடவடிக்கையை கைவிட்டுள்ளதாகவும், இது சரியான முடிவுதான் என்றும் கூறியுள்ளது.

தமிழக சட்டப்பேரவையில் கடந்த மே மாதம் தவெக அரசு நம்பிக்கை தீர்மானம் கொண்டுவந்தபோது அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் 25 பேர் அக்கட்சியின் கொறடா உத்தரவை மீறி அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதையடுத்து அவர்களை தகுதிநீக்கம் செய்யக்கோரி பேரவைத் தலைவரிடம் அக்கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி மனு அளித்தார்.

இதற்கிடையே நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியை ராஜினாமா செய்த நிலையில், அவர்களைத் தவிர்த்து 21 பேர் மீது நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் பேரவைத் தலைவரிடம் திரு. பழனிசாமி கோரிக்கை விடுத்தார்.

ஆனால் 21 பேரும் மன்னிப்பு கோரியதையடுத்து, அவர்கள் மீதான நடவடிக்கையை கைவிடுமாறு பேரவைத் தலைவரை திரு. பழனிசாமி கேட்டுக்கொண்டார். இதை பேரவைத்தலைவரும் ஏற்றுக்கொண்டார்.

தேசிய தேர்வு முகமை நடத்தும் தேர்வு விடைகளை சரிபார்க்கும் நடைமுறைகள் மாணவர்களுக்கு நியாயமான தீர்வை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய வினாக்களுக்கான விடைகளை அறிந்துகொள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கும்போது அது அதிக செலவாகும் என்பது தவறான தகவல் என்று தேர்வு முகமை கூறியுள்ளது.

உரிய விடைகளைத் தெரிந்துகொள்ள ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்கலாம் என்றும், இதன் மூலம் பொறியியல் சேர்க்கைக்கான அகில இந்திய நுழைவுத் தேர்வு, மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு, யு.ஜி.சி. நெட் தேர்வு போன்ற தேர்வுகளை எழுதும் மாணவர்கள், தாங்கள் எழுதிய விடைகள் தவறு என்று மதிப்பெண் குறைக்கப்பட்டிருந்தால் ஆட்சேபனை தெரிவிக்க வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் ஆட்சேபனையை வினாத்தாள் தயாரித்த நிபுணர்கள் ஏற்றுக்கொண்டால் அதற்காக மாணவர்கள் செலுத்திய விண்ணப்பத் தொகை திருப்பித் தரப்படும் என்றும் தேர்வு முகமை கூறியுள்ளது.

ஈரப்பதம் மற்றும் மாறிவரும் வானிலை காரணமாக, நாட்டின் பல்வேறு பகுதிகளில் H1N1 எனப்படும் பன்றி காய்ச்சல் மற்றும் பிற சுவாசத் தொற்றுகள் அதிகரித்து வருவதாகச் சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மழைக்காலங்களில் இன்ஃப்ளுயன்ஸா போன்ற பருவகாலத் தொற்றுகள் பொதுவாகவே அதிகரிக்கக்கூடும் என்று குறிப்பிட்டுள்ள நிபுணர்கள், முதியவர்கள் மற்றும் இணை நோய்கள் உள்ளவர்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய பிரிவினர் உரிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

காய்ச்சல், சளி, மூக்கடைப்பு அல்லது இருமல் மற்றும் கடுமையான உடல்வலி அல்லது சோர்வு போன்ற அறிகுறிகள் இந்த பருவத்தில் பரவலாகக் காணப்படுகின்றன.

பன்றி காய்ச்சல் தொற்றைத் தவிர்க்கத் தடுப்பூசிகள் உள்ளதாகவும், பொதுமக்கள் பொது இடங்களில் முகக்கவசம் அணிவதுடன், தற்காலிக மருத்துவப் பரிசோதனைகளைத் தவிர்த்து, காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டவுடன் உடனடியாக மருத்துவரை அணுகுமாறு நிபுணர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

<<<<>>>>

தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இன்று இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் லேசான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட பல மாவட்டங்களில் நேற்று மாலை இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

கடலூர் மாநகரில் பெய்த கனமழையால் நகரின் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது.

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்றிரவு ஒரு மணி நேரத்திற்கும் மேலாகப் பெய்த மழையால் விவாசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

<<<<>>>>

## இருவரிச் செய்திகள்

ஈரான் மீது அமெரிக்கா புதிதாக பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

-------------

அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடை, பொருளாதார பயங்கரவாதம் என்று ஈரான் விமர்சித்துள்ளது.

-------------

புதுதில்லியில் உள்ள கடமைப் பாதை பல்வேறு வசதிகளுடன் மறுசீரமைக்கப்படும் என்று மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

-------------

திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோவிலில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் செல்ஃபோன் கொண்டு செல்ல தடை விதிக்கப்படுவதாக கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

-------------

ஓணம் பண்டிகையை முன்னிட்டு பெங்களூரு யஷ்வந்த்பூரில் இருந்து தருமபுரி, சேலம், ஈரோடு வழியாக திருவனந்தபுரத்திற்கு இன்று பிற்பகல் சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------

உதகை அருகே மேலூர் அறைஹட்டி கிராமத்தில் குட்டியுடன் உலா வரும் யானைக் கூட்டத்தை வனப் பகுதிக்குள் விரட்ட வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-------------

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே ரஹ்மானியாபுரத்தில் மர்மக் காய்ச்சலுக்கு 3 பேர் உயிரிழந்ததையடுத்து, அப்பகுதியில் சுகாதாரத்துறையினர் முகாமிட்டு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

-------------

சென்னையில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைநீர் வடிகால்வாய்களில் தூர்வாரும் பணியை மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

-------------

சென்னையில் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி வெளிப்படைத் தன்மையுடன் கட்டட வரைபட அனுமதி பெறுதல் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட நில அளவையர்கள் உடனான ஆலோசனைக் கூட்டம் ரிப்பன் மாளிகையில் நேற்று நடைபெற்றது.

-------------

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்திய வீரர்கள் இன்று சீன வீரர்களை எதிர்கொள்கின்றனர்.

புதுதில்லியில் நடைபெறும் இப்போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி இணை, சீனாவின் லியாங் வெய் கெங் மற்றும் வங் சாங் இணையை எதிர்கொள்ளவுள்ளனர்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் த்ரீசா ஜல்லி மற்றும் காயத்ரி கோபிசந்த் இணை, சீனாவின் ஜியா யி ஃபான் மற்றும் ஜாங் ஷு கியான் இணையைச் சந்திக்கவுள்ளனர்.

-------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நெல்லை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய சேலம் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 140 ரன் எடுத்தது.

141 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய நெல்லை அணி 16 புள்ளி ஒரு ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 146 ரன் எடுத்தது.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு போட்டியில் திருப்பூர் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் மதுரை அணியை வென்றது.

------------

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

வடக்கு ஹாலந்தில் உள்ள Amstelbeen நகரில் நடைபெறும் இப்போட்டி, இந்திய நேரப்படி இரவு மணி 9.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>